அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை: 10/2017

எனது இல. EST-3/DICIP/06/0246
அரசாங்க நிர்வாக மற்றும்
முகாமைத்துவ அமைச்சு
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07.

2017.05.25

அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும்
மாகாண பிரதமசெயலாளர்களுக்கும்
திணைக்களத் தலைவர்களுக்கும்

**தாபன விதிக் கோவையின் II ஆம் வகுதியின் XLVIII ஆம் அத்தியாயத்தின் 1:1:1 மற்றும் 1:1:2 உப பிரிவுளை திருத்தியமைத்தல்**

தாபனவிதிக் கோவையின் II ஆம் வகுதியின் XLVIII ஆம் அத்தியாயத்தின் 1:1:1 மற்றும் 1:1:2 உப பிரிவு தொடர்பாக தங்களது அவதானத்துக்கு உட்படுத்துகின்றேன். அவ் உப பிரிவுகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு திருத்தியமைப்பதற்கு 2017.05.02 ஆந் திகதி நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

1:1:1 “ஒழுக்காற்று அதிகாரி” என்பது, கீழே குறிப்பிடப்பட்டுள்ள 2 ஆம் பிரிவிற்கமைய, எந்தவொரு அலுவலரையேனும் சேவையிலிருந்து பணிநீக்கம் செய்வதற்கோ அல்லது அவர் சம்பந்தமான ஒழுக்காற்று கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கோ அதிகாரமளிக்கப்பட்டுள்ள உரிய அதிகாரயைக் குறிக்கும். அப் பதவியை நிரந்தரமாக வகிப்பவர் இல்லாத சந்தர்ப்பத்தில், அப் பதவியில் பதில் கடமையாற்றுவதற்கு, பணியாற்றுவதற்கு அல்லது தழுவல் கடமையாற்றுவதற்கு நிலவுகின்ற ஏற்பாடுகளுக்கு அமைய, முறையாக நியமிக்கப்படும் எந்தவொரு அதிகாரியும் ”ஒழுக்காற்று அதிகாரி” என அழைக்கப்படுவர்.

1:1:2. பதில் கடமையாற்றும் அல்லது கடமைகளை மேற்கொள்ளும் பதவியொன்றை வகிக்கும் அரசாங்க அலுவலர் ஒருவர் சம்பந்தமாக எனில், அவரது “ஒழுக்காற்று அதிகாரி” எனப்படுபவர், எந்த அலுவலர் அப் பதவியை நிரந்தர அடிப்படையில் வகிக்கின்றாரோ அவரே அப்போது மேற்படி அலுவலர் சம்பந்தமான உரிய ஒழுக்காற்று அதிகாரியாக விளங்குவார்.

ஒப்பம்./ ஜே.ஜே. ரத்னசிறி
செயலாளர்
அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு